**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைச் சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் அதிகாரசபை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.
சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக்

கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் தொழில்சார் தீர்ப்பு மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்விற்கு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள்களும் நியாயமாகவும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க அதிகாரசபை செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5. நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 1 இன் 48 ஆம் பந்தியின் பிரகாரம், நியமத்தின் மூலம் தேவைப்படும் போது அல்லது அனுமதி வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பம் தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் வருமானங்கள் மற்றும் செலவினங்கள் ஈடுசெய்யப்படக் கூடாத போதிலும், 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான மருத்துவமனைக் கட்டண கடன் பட்டோர் கணக்குகளில் காணப்பட்ட ரூபா 7.77 மில்லியனான செலவு மீதி மருத்துவமனை கட்டணங்கள் கடன் பட்டோர் கணக்குகளில் வரவு மீதிகளிலிருந்தும் வியாபாரக் கடன் கொடுத்தோர் கணக்கில் நிலவிய ரூபா 0.39 மில்லியன் செலவு மீதிகளிலிருந்தும் மருத்துவமனை பதவியணியினருக்காக இலவசமாக வழங்கப்பட்ட மருத்துவ சிகிச்சைகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 172.45 மில்லியன் தொகை மற்றும் மதகுருமார் மற்றும் ஏனையவர்களுக்கு இலவசமாக சிகிச்சைகள் செய்ய செலவிடப்பட்ட ரூபா 60.49 மில்லியன் | மருத்துவமனை கணக்கீட்டு செயற்பாட்டினை மேற்கொள்ளும் அக்பெக் (Accpac) கணக்கீட்டு முறைமையில், 2016 ஆம் ஆண்டு முதல் இடம் பெற்றிருந்த பிழைகளை சீராக்குவதற்கும் கடன்பட்டோரின் கடன் கடிதங்களில் இருந்த தவறுகள் உட்பட கடன்பட்டோரின் பொருள் பெறுவனவுக் குறிப்புகளில் GRN) இருந்த பிழைகள் மேற்கண்ட முறையின் கீழ் சரிசெய்யப்பட்டதாகவும் எதிர்காலத்தில் Systolic சிஸ்டாலிக் அமைப்பிலும் கடன்பட்டோர் கணக்குகள் செயலாக்கப்படும் என்பதால் இந்த பிழைகள் எதிர் வரும் காலங்களில் சரி செய்யப்படுமெனவும் மருத்துவமனை ஊழியர்களின் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மருத்துவ கட்டண வருமானத்திலிருந்தும் ஈடுசெய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக முன்னைய ஆண்டிலும் சுட்டி காண்பிக்கப்பட்டிருந்த போதும் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | மருத்துவச் செலவை ஊழியர்களின் செலவாக உள்ளடக்குவதற்கும், மத குருமார்களின் சிகிச்சைக்காக செலவழித்த பணத்தை பொது மேந்தலையாகக் காண்பிக்கவும் நடவடிக்கை எடுப்பதாக. | |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக் களுக்கான பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 3,681.26 மில்லியன் கிரயமான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஏற்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | தற்போது இப்பணியில் 30 சதவீதம் அளவில் சரி செய்யப்பட்டுள்ளதுடன் மீதமுள்ள மருத்துவ உபகரணங்களை (Medical equipment) மீள்மதிப்பீடு செய்வதற்கு தேவையான விசேட நிபுணத்துவம் மருத்துவமனையில் இல்லை, எனவே சுகாதார அமைச்சின் உயிரியல் மருத்துவ பொறியியலாளர் பிரிவினால் பெயரிடப்பட்டுள்ள நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுடன் இணைந்து பணி புரிந்து இப்பணியை விரைவில் முடிக்க முடியுமென எதிர்பார்க்கிறேன். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலைக்கு 2022 ஆம் ஆண்டிற்குரியதாக கிடைத்திருந்த ரூபா 44.9 மில்லியன் மூலதன மானியம் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | பதிலை ஏற்றுக் கொள்வதாக | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மருத்துவமனை பதவியணியினருக்காக இலவசமாக வழங்கப்பட்ட மருந்துகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 72.47 மில்லியன் பதவியணியினர் செலவினத்தின் கீழ் காண்பிக்காமல் மீளாய்வாண்டின் பொருட்கள் மற்றும் பாவனை பொருட் செலவினங்களிலிருந்து கழித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | மருத்துவமனை பதவியணியினருக்காக மருந்துவ சிகிச்சைகளுக்காக செல்லும் செலவினத்தை எதிர்காலத்தில் சீராக்க நடவடிக்கை எடுப்பதாக | இத்தவறினை சீராக்கவுதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வைத்தியசாலையால் 2022 ஆம் ஆண்டில் காணி மற்றும் கட்டிடங்கள் போன்ற சொத்துக்களுக்கரிய மீள்மதிப்பீட்டு அறிக்கை 2022 ஒக்தோபர் 09 ஆந் திகதியும் 2022 ஒக்தோபர் 25 ஆந் திகதிகளில் கிடைக்கப் பெற்றிருந்தன. வைத்தியசாலையால் 2022 சனவரி 01 ஆந் | சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | இத்தவறினை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதி முதல் மீள்மதிப்பீட்டு பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட திகதி வரையான காலப்பகுதிக்காக பெறுமானத்தேய்வு செய்யப்படாமை காரணமாக பெறுமானத்தேய்வு மற்றும் மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபா 25.34 மில்லியனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மீள்மதிப்பீடு செய்த சொத்துக்களுக்குரிய விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | | |
| (இ) | மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் மதிப்பீட்டு கடிதத்தின் திகதியில் உள்ளவாறு மீள் மதிப்பீடு செய்யப்படாத 2022 சனவரி 01 ஆந் திகதி முதல் மீள்மதிப்பீடு செய்து அப் பெறுமதிகள் அடிப்படையில் சொத்துக்களுக்கு பெறுமானத் தேய்வு செய்த காரணத்தினால் ஆண்டின் பெறுமானத்தேய்வு ரூபா 210.02 மில்லியனால் அதிகரித்தும் இலாபம் அப் பெறுமானத்தால் குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன. | 2023 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது நிறுத்தி வைத்த இலாபத்தில் சீராக்கங்களைச் செய்வதாக. | இத்தவறினை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | வைத்தியசாலைக்கு உரித்தான காணி ரூபா 4,845.50 மில்லியனுக்கு மீள் மதிப்பீடு செய்யும் போது காணியின் அளவாக 9.8047 ஹெக்டேயர் மாத்திரம் கருத்திற் கொள்ளப்பட்டிருந்தது. வைத்தியசாலைக்கு உரித்தான மொத்தக் காணி 10.0229 ஹெக்டேயராக இருந்தமையால் 0.2182 ஹெக்டேயர் காணி மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | காணியின் சரியான திட்டத்தில் குறிப்பிடப்பட்ட நில அளவிற்கு மீண்டும் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | முழுக் காணியையும் மீள் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | தொழிற்சார் கட்டணங்களை அறவிடுதல் மற்றும் மீளச் செலுத்துதல் ஆகியவற்றினை கணக்கு வைக்கும் திட்டவட்டமான மற்றும் முறையான நடைமுறையொன்று வைத்தியசாலை சபையினால் இனங் காணப்பட்டிருக்கவில்லை. அத்துடன் தொழில்சார் கட்டண வருமானமான ரூபா 404.57 மில்லியன் செலுத்த வேண்டிய தொழில்சார் கட்டணங்கள் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு மீளாய்வாண்டில் பணமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த தொழில்சார் கட்டணங்கள் ரூபா 377.29 மில்லியன் அக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. கடன் கடிதங்கள் (Credit Letter) அடிப்படையில் மருத்துவமனையிலிருந்து விலகிச் செல்லும் நோயாளிகளின் மருத்துவமனை கட்டணங்கள் மற்றும் தொழில்சார் கட்டணங்களை திட்டவட்டமாக இனங் காணாது 2022 திசெம்பர் 31 ஆம் திகதி மருத்துவமனை கட்டண வருமானங்கள் கணக்கில் ரூபா 50.83 மில்லியன் செலுத்த | 2022 ஒக்டோபர் முதல், தொழில்முறைக் கட்டணம் மருத்துவமனைக் கட்டணத்தில் சேர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக. Systolic சிஸ்டம் மற்றும் AccPac அக்பெக் அக்கவுண்ட் சிஸ்டம் இணைக்கப்பட்டுள்ளதால் (Link) செலவுக் குறிப்பினை (Credit Note) விட்டு வெளியேறும் நோயாளிகளின் தொழில்முறை கட்டணங்கள் எதிர்காலத்தில் துல்லியமாக அடையாளம் காண | தொழில்சார் கட்டணங்களை அறவிடுதல் மற்றும் கொடுப்பனவு தொடர்பான கொள்கையொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் அறவீடுகள் மற்றம் கொடுப்பனவுகள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய தொழில்சார் கட்டண கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே 1998 ஆம் ஆண்டு முதல் காணப்படும் ரூபா 3.61 மில்லியனான செலுத்த வேண்டிய தொழில்சார் கட்டணக் கணக்கின் மீதி தீர்வு செய்வதற்கு அல்லது வருமானமாக இனங்காண்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முடியும் எனவும் 1998 ஆம் ஆண்டு முதல் தொழில்சார் கட்டண நிலுவைகளை வருமானமாக அங்கீகரிக்க நடவடிக்கை எடுப்பதாக | |
| (ஊ) | Systolic முறைமையில் இடம்பெறும் GRN அகற்றல் Accpack கணனி கட்டமைப்பில் நாளது வரையாக்காமை Accpack கணினி கட்டமைப்பில் GRN இரண்டு தடவை பதிவு செய்யப்பட்டிருந்தமை, பெறுமானங்கள் வேறுபட்டு பதிவு செய்திருந்தமை Accpack கணனி கட்டமைப்பில் பணம் செலுத்துவது இடம் பெற்ற போதும் அக்கொடுப்பனவுகள் தனியால் கடன் கொடுத்தோர் மீதிகளுடன் இணக்கம் செய்யாமை மற்றும் தனியால் கடன் கொடுத்தோர் மீதியில் தண்டப் பணம் மற்றும் தாமத சீராக்கக் கட்டணங்கள் போன்றவை மேற்கொள்ளப்படாத காரணத்தினால் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் வியாபாரக் கடன் கொடுத்தோர் ரூபா 3 மில்லியனுக்கு மேற்பட்ட பெறுமதி யொன்று பதிவழிக்கப்பட்டிருந்தது. இத்தவறுகளை சரி செய்வதற்காக நாட்குறிப்பு உறுதி சீட்டுக்கள் தயாரிக்காமலும் குறித்த சீராக்கங்கள் முன்னைய ஆண்டுகளின் சீராக்க கணக்குகள் மூலம் மேற்கொள்ளாமல் தேறிய மீதி ரூபா 160,365 தொகை திரண்ட இலாப நட்டக் கணக்கிற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | Accpac மீதி முறைமையில் தவறுகளை சீராக்குதல் Debit Note மற்றும் Credit Note மூலம் மாத்திரமாகும். இதற்காக நாட்குறிப்பு உறுதிச் சீட்டுகள் பயன்படுத்த முடியாது எனவும் இச்சீராக்கம் முன்னைய ஆண்டுகளின் இணக்க கணக்கின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள தாகவும் இதற்கு முன்னைய ஆண்டுகள் கணக்கின் மீதியான ரூபா 160,365 தொகையை எதிர்வரும் காலங்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | இத்தவறினை திருத்தம் செய்யப்பட வேண்டும். |
| (எ) | கடன்பட்டோர் தொடர்பான கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரகாரம் ஐயக் கடனுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட நடமுறையின் பிரகாரம் 5 சதவீதம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அதற்கு இணங்காமல் ஐயக் கடன் ஒதுக்கீடாக ரூபா 7.89 மில்லியன் குறைத்து கணக்கீடு செய்தமையால் மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 7.89 மில்லியனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது இவ்வேறுபாட்டை நிறுத்தி வைத்த இலாபத்திற்கு சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பதாக | இத்தவறினை திருத்தம் செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | 2016 முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 18.97 மில்லியன் ஆன 05 தனியால் கடன் பட்டோர் மீதிகள் தொடர்பாக அப்பணத்தை அறவிடுவது அல்லது உரிய அங்கீகாரத்துடன் கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அத்தொகையை அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அத்தொகையை அறவிடுவதற்கு அல்லது பொருத்தமான அங்கீகாரத்தின் கீழ் பதிவழிப்பதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | | | எடுக்க வேண்டும் |
| (ஐ) | 2016 முதல் 2019 ஆம் ஆண்டு வரை கடன்பட்டோர் மீதியில் காணப்பட்ட நோயாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 19.96 மில்லியன் ஆன மருத்துவமனைக் கட்டணங்கள் மீளாய்வாண்டில் பதிவழிக்கப்பட்டிருந்த போதும் அதற்குரிய பணிப்பாளர் சபை அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | 2016 ஆம் ஆண்டிலிருந்து காணப்படும் பெறுமதி பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு பணிப்பாளர் சபையின் தீர்மானத்தை செயற்படுத்துவதாக | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக |
| (ஒ) | ரூபா 17.99 மில்லியன் ஆன வேலை ஆரம்பிப்பு முற்பணம் முற்பணமாக காண்பிக்காமல் நிதிக் கூற்றுக்களில் நடைமுறை வேலையாக காண்பிக்கப்பட்டிருந்தது. இத்தொகையில் 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் மலசலகூட புனரமைப்பு செய்யும் 2 திட்டங்களுக்கு வேலை ஆரம்பிப்பு முற்பணத்தின் கூட்டுத்தொகை ரூபா 9.48 மில்லியன் தீர்வு செய்யப்பட்டிருந்த போதும் நிதிக் கூற்றுக்களில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த வேலை ஆரம்பிப்பு முற்பணம் இறுதி கணக்குகளை சமர்ப்பிக்கும் போது மாத்திரம் நடைமுறை வேலையாக அட்டவணையில் காண்பிக்கப்பட்டதாகவும் தீர்வு செய்யப்பட்ட ரூபா 1,152,547 தொகை மற்றும் ரூபா 8,326,769 தொகையை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | இத்தவறினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஔ) | 2021 ஆம் ஆண்டின் போது பெண்கள் விடுதிக்கட்டிடம் ரூபா 64.36 மில்லியன் தொகை கூடுதலாக மூலதனமாக்கப்பட்டதையும் நடைமுறை வேலைகள் கணக்கில் ரூபா 72.95 மில்லியன் கூடுதலாக அகற்றியதையும் முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக் காண்பித்த போதும் மீளாய்வாண்டிலும் குறித்த சீராக்கங்களை மேற்கொண்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | இத்தவறினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 இனங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக கடன்கொடுத்தோர், கடன்பட்டோர், இடர்கடன், இடர்கடன் வட்டி ஆகிய 04 விடயங்களுக்கு உரிய நிதிக்கூற்றுக்கள் மற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்கள், பதிவேடுகள் மற்றும் கணனி அறிக்கைகளின் பிரகாரம் ரூபா 42.02 மில்லியனான வேறுபாடொன்று நிலவியதுடன் வேறுபாட்டுக்கான காரணங்கள் தெளிவுபடுத்தப்படவில்லை. | இந்த வேறுபாடுகளை அடையாளம் காண்பதற்காக மற்றும் திருத்தங்களை 2023 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இடர் கடன் மீதி அறிக்கைகளில் உரிய வேறுபாடுகளுக்கு காரணங்களைக் கண்டறிய விடயப் பொறுப்பு உத்தியோகத்தர் களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட தரவுகள் உரிய அட்டவணைகள், பட்டியல்கள் மற்றும் கணனி அறிக்கை என்பவற்றுடன் ஒப்பீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியாக ரூபா 1,025.06 மில்லியனான மருத்துவமனை கட்டணங்கள் கடன்பட்டோர், வியாபார கடன்கொடுத்தோர், சேவை கட்டணங்கள் ஆகிய 03 கணக்கு விடயங்கள் தொடர்பில் காலப்பகுப்பாய்வு, பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் பயன்பாட்டு ஆவணங்கள் போன்ற சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் திருப்திகரமாக சான்றுறுதிப் படுத்துவதற்கு அல்லது மெய்மையாய்வு செய்வதற்கு அல்லது கணக்காய்வில் ஏற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | கோரிய பிரகாரம் கால எல்லைகளை மாற்ற முடியுமா என்று ஆராய்ந்து பார்த்து பதில் வழங்குவதாக குறித்த பணிப்பாளர்கள் சபை தீர்மானத்தை கண்டறிந்து கணக்காய்விற்கு வழங்க நடவடிக்கை எடுப்பதாக | காலப்பகுப்பாய்வு, பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் பயன்பாட்டு ஆவணங்கள் போன்ற சான்றுகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்
#### பெற வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வைத்தியசாலை சபையினால் 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலும் 2016 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலும் மருத்துவ வளங்கள் பிரிவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்த மருந்துகள் மற்றும் ஏனைய அறுவை சிகிச்சை உபகரணங்களுக்காக செலுத்த வேண்டிய தொகை முறையே ரூபா 297.23 மில்லியன் மற்றும் ரூபா 401.45 மில்லியன் சுகாதார அமைச்சினால் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்ட நோயாளிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட இருதய சத்திர சிகிச்சைகளுக்காக அமைச்சிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய ரூபா 748.55 மில்லியன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பேரில் ஈடு செய்யப்பட்டிருந்தது. இந்த தொகையை ஈடுசெய்வதற்காக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே சுகாதார அமைச்சிலிருந்து அறவிடப்பட வேண்டிய பல்கலைக்கழக கல்லூரிக்காக 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் வைத்தியசாலையால் செலவிடப்பட்டிருந்த ரூபா 8.93 மில்லியன் பணமும் அவ்வாறு திறைசேரியின் அங்கீகாரமின்றி ஆண்டில் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு செலுத்த வேண்டிய தொகையில் இருந்து ஈடு செய்யப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பேரில், உரிய எதிரீடுகள் செய்யப்பட்டன. திறைசேரியுடன் கலந்துரையாட்டு எதிர்காலத்தில் இந்தப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை.**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | | |
| (i) II ஆம் அத்தியாயத்தின் 2.1 மற்றும் 2.2 முதல் 2.6 வரையான பிரிவுகள் | ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரித்து தாபன விதிகள் கோவையில் காண்பிக்கப்பட்டுள்ள செயல் ஒழுங்கு முறைகளை பின்பற்றி அந்த நடைமுறைக்காக உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் இந்த அறிக்கை திகதி வரையிலும் ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | மனிதவள சிக்கல்களை தீர்வு செய்வதற்கான நிறுவனமொன்றிலிருந்து வெளிவாரி உத்தியோகத்தர்களுடன் கூடிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் இக்குழுவின் மூலம் மனித வள சிக்கல்களை தீர்வு செய்ததன் பின்னர் வழங்கப்பட்ட தகவல்கள் அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடைமுறையை தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக. | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) XIX ஆம் அத்தியாயத்தின் 5.8 ஆம் பிரிவு | அரசின் வீடுகளைப் பயன்படுத்தும் போது நீர் மற்றும் மின்சாரக் கட்டணங்களை உத்தியோகத்தரால் செலுத்தப்பட வேண்டிய போதிலும் தாதியர் விடுதிகளில் நீர்க் கட்டணங்களாக வதிவிடக்காரர்களின் பயன்பாட்டினை கருத்திற் கொள்ளாமல் மாதாந்தம் ரூபா 200 வீதம் மற்றும் Changing room இற்காக ஒருவரிடமிருந்து மாதாந்தம் ரூபா 25 வீதம் அறவிடப்பட்டிருந்ததுடன் தங்குமிட விடுதியின் மின்சாரக் கட்டணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நீர் மற்றும் மின்சாரத்திற்கான வதிவிட பயன்பாட்டினை அளவிடுவதற்கு மீற்றர்களைப் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் அறவீடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பேன் | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 ஆம் பிரிவுகள் | வாகன விபத்துக்கள் காரணமாக ஏற்படும் நட்டங்கள் தொடர்பாக அதற்கு பொறுப்பானவர்களை நிச்சயிப்பதற்காக பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பொறுப்பான தரப்பினரை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டின் இடம்பெற்ற திடீர் விபத்துக்கள் தொடர்பான தேவையான விசாரணைகளை அன்றைய நிர்வாகம் மேற்கொள்ளவில்லை என்பதாகவும் ஆனால் தற்போது இடம்பெற்ற விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரம் விசாரணைகள் நடத்தப்பட்டு, இழப்புகளுக்கு பொறுப்பான வர்களை அடையாளம் காண தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 395(ஆ), 395(இ) | வங்கிக் கணக்கிற்காக ஒவ்வொரு மாதத்திற்கான வங்கி இணக்கக் கூற்று அடுத்த மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் வைத்தியசாலையின் பிரதான நடைமுறைக் கணக்கிற்குரிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இணக்கக் கூற்று 2023 ஏப்ரல் 21 ஆந் திகதி தயாரிக்கப்பட்டிருந்தது. | வங்கி இணக்க கூற்றுக்களைத் தயாரிக்கும் போது வேறுபாடுகள் காட்டப்பட்டதால், அதை மேலும் சரிபார்க்க வேண்டியிருந்தது. எனவே, வங்கி இணக்க கூற்றுக்களை உரிய திகதியில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க இயலாமல் போனதை ஏற்றுக்கொள்வதாக. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2007 மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் பெறுகைக்கான வழிகாட்டி கோவையில் 5.2 ஆம் வழிகாட்டி | அவசர பெறுகை சந்தர்ப்பம் ஒன்று நீங்கலாக கொள்வனவுகளின் போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு சுகாதார அமைச்சின் பிரதிநிதியொருவர், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் பிரதிநிதியொருவர் குறைந்த குறித்த விசேட நிபுணத்துவத்துடன் கூடிய இரண்டு மதியுரையாளர்களும் | எதிர்கால பெறுகை களுக்கு இந்த விதியைப் பயன்படுத்துவது தொடர்பாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளரிடம் (பெறுகை) ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளவும், இது தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு | 2007 மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் பெறுகைக்கான வழிகாட்டி கோவையில் 5.2 ஆம் வழிகாட்டியின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பொது திறைசேரியால் பெயரிடப்பட்ட பிரதிநிதி ஒருவருடன் கூடியதாக இருக்க வேண்டிய போதிலும் ரூபா 1.96 மில்லியன் பெறுமதியான சத்திர சிகிச்சை உபகரணங்கள் மற்றும் ரூபா 9.76 மில்லியன் பெறுமதியான X-ray system உபகரணங்களின் கொள்வனவின் போது அதன் பிரகாரம் அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | முன்வைக்கவும் நிதி இராஜாங்க அமைச்சிக்கு அனுப்பிவைக்கப்பட்டு ள்ளதுடன் ம் சமர்ப்பிக்கவும் எதிர்காலத்தில் அந்த அறிவுறுத்தல்களின் படி நடவடிக்கைகள் எடுப்பதாக. | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2016 ஒக்தோபர் 10 ஆந் திகதிய DMS/1758-Vol.1 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்கள கடிதம் . | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மீள்கட்டமைப்பு முன் மொழிவு தயாரிக்கப்பட்டு தேசிய சம்பளங்கள் மற்றும் ஆளணி ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மனிதவள சிக்கல்களை தீர்வு செய்வதற்கான நிறுவனமொன்றிலிருந் து வெளிவாரி உத்தியோகத்தர்களுட ன் கூடிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதா கவும் இக்குழுவின் மூலம் மனித வள சிக்கல்களை தீர்வு செய்ததன் பின்னர் வழங்கப்பட்ட தகவல்கள் அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடைமுறையை தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தாக. | முகாமைத்து வ சேவைகள் திணைக்கள கடிதத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும் . |
| (உ) | 2019 திசெம்பர் 17 ஆந் திகதிய PFD 08/2019 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | நிறுவகத்தினால் உடனடி பெறுகை முறைமையின் கீழ் செய்யப்படுகின்ற கொள்வனவு 2020 சனவரி முதல் இலத்திரனியல் பெறுகை நடைமுறை மூலம் மேற்கொள்ள வேண்டிய போதிலும், இந்த அறிக்கை திகதி வரை அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் இது தொடர்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக. | பொது நிதிச் சுற்றறிக்கை யின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் நல்லாளுகைக்கான வழிகாட்டலின் 2.3 ஆம் வழிகாட்டி | சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய வகையில் தந்திரோபாய திட்டமிடலொன்றை தயாரிக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரியதாக அவ்வாறான திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது மூன்று மாத தந்திரோபாய திட்டத்தின் முதலாவது வரைவு தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக | பொது முயற்சிகள் சுற்றறிக்கையி ன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 247.23 மில்லியனான இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு ஒத்த முன்னைய ஆண்டிற்கான இலாபம் ரூபா 254.19 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 501.42 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 730.78 மில்லியனால் அதிகரித்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

2020 முதல் 2022 ஆம் ஆண்டு வரை காலப்பகுதியில் கொடுப்பனவு வார்ட்களுக்குரிய துறைசார் கட்டணங்களாக வைத்திய மற்றும் ஏனைய பதவியணியினருக்கு செலுத்திய தொகை மற்றும் அவ்வாரட்களில் இருந்து வைத்தியசாலைகளுக்கு கிடைத்த வருமானம் தொடர்பான விபரங்கள் பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

| | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| அறவிடப்பட்ட துறைசார் கட்டணங்கள் | 363,441,668 | 363,748,356 | 514,552,338 |
| கொடுப்பனவு வார்ட்களில் இருந்து கிடைத்த வருமானம் | 232இ400இ926 | 284,583,346 | 342,927,187 |
| மொத்தம் | **595,842,594** | **648,331,702** | **857,479,525** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வைத்தியசாலையில் வளங்களை பயன்படுத்தி கடமை நேரத்திற்கு புறம்பாக செய்யப்படும் சத்திர சிகிச்சை மற்றும் பரிசோதனை களுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட தரத்தில் அல்லது திட்டவட்டமான கொள்கை ஒன்று இல்லாமல் விசேட வைத்தியர்களின் விருப்பத்தின் பிரகாரம் துறைசார் கட்டணங்கள் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் இக்கட்டணங்களைத் தீர்மானிப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமம் ஒன்று வைத்தியசாலையில் ஏற்படுத்துவதற்கு கட்டுப்பாட்டு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொழில்முறை கட்டணங்கள் தனியார் சுகாதார ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் (PHRC) கட்டுப்படுத்தப்படுகின்றன. இந்த கட்டணங்களின் விலையை கட்டுப்படுத்தும் முறையை ஆணையம் தயாரித்து செயல்படுத்த முயன்றபோது, ஒரு குழுவினர் அதை எதிர்த்து ஒரு WRIT உத்தரவால் தடுக்கப்பட்டது. விசாரணை முடிந்ததும், தீர்ப்பின் பிரகாரம் அமுல்படுத்தப்படும் என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். | சத்திரசிகிச்சை மற்றும் பரிசோதனைகளுக்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமத்தின் பிரகாரம் அறவீடு செய்யும் நடைமுறையொன்ற காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2022 ஆம் ஆண்டில் பிரதான சத்திர சிகிச்சை கூடத்தில் வழமையான கடமை நேரத்தில் உள்ள நோயாளிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட 79 சத்திர சிகிச்சைகளுக்காக அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் பணிப்பாளர் தீர்மானங்களுக்கு புறம்பாக ரூபா 6.66 மில்லியன் துறைசார் கட்டணங்களாக அறவிடப்பட்டிருந்தது. | சத்திரசிகிச்சை அறை மற்றும் கணக்கீட்டு துறைக்கு இடையே நேரடி ஒருங்கிணைப்பு அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது மற்றும் இந்த நடவடிக்கைகளின் ஒழுங்குபடுத்தல் செயற்பாடு தொடங்கப்பட்டுள்ளதாக | அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் பணிப்பாளர் தீர்மானங்களின் பிரகாரம் நடவடிக்கை எடு:த்தல் வேண்டும் |
| (இ) | வைத்தியசாலை பதவியணிக்கு உரித்தல்லாத 10 வெளியக வைத்தியர்களால் 2022 ஆம் ஆண்டில் வைத்தியசாலையின் வளங்களை பயன்படுத்தி சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டு இருந்ததுடன் இந்த வைத்தியர்களால் 2022 ஆம் ஆண்டில் ரூபா 23.78 மில்லியன் தொகை துறைசார் கட்டணங்களாக நோயாளர்களிடம் இருந்து அறவிடப்பட்டிருந்தது அத்தொகையில் வைத்தியசாலைக்கு 0.15 சதவீதம் மாத்திரம் சேவைக் கட்டணமாக அறவிடப்பட்டிருந்தது வெளியக வைத்தியர்கள் வைத்தியசாலையில் தனிப்பட்ட சேவையில் ஈடுபடுவதற்கும் துறைசார் கட்டணங்களை அறவிடுவதற்குமான உரிய அங்கீகாரம் கணக்காவிற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. அந்த மருத்துவர்களுடன் உடன்படிக்கை மேற்கொள்ளாமையில் நோயாளிகளின் பொறுப்பு வைத்தியசாலைக்கு கையளிக்கப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | துறைசார் கட்டணங்கள் மூலம் உரிய சேவைக் கட்டணம் முகாமைத்துவ செலவினமொன்றாக அறவிடப்பட்ட போதும் இதற்காக செலவாகும் ஏனைய செலவினம் நோயாளிகளிடமிருந்தே அறவிடப்படுவதுடன் அதற்கு 35 சதவீத இலாப எல்லையை வைத்தியசாலை அறவிடுகின்றது எனவும் வெளியிலிருந்து வரும் விசேட மருத்துவர்கள் தொடர்பாக பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பித்து அதற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | வெளியக வைத்தியர்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் போது உரிய அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் பொறுப்பு தொடர்பாக உடன்படிக்கைக்கு வருவதற்கு நடவடிக்கை எடு:த்தல் வேண்டும் |
| (ஈ) | அமைச்சரவை அங்கீகாரம் இன்றி பணிப்பாளர் சபை தீர்மானம் ஒன்றின் பிரகாரம் உதவி மருத்துவர் மற்றும் ஏனைய பதவியணியினருக்காக 2022 ஆம் ஆண்டின் போது ரூபா 110.28 மில்லியன் துறைசார் கட்டணங்களாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | விசேட வைத்திய நிபுணர் அறுவை சிகிச்சை செய்யும் போது, மற்றொரு ஆதரவுக் குழுவின் சேவைகளை கடமை நேரத்திற்கு புறம்பாக பெறுவது அவசியம். இந்தக் காலக்கட்டத்தில் அரசாங்கப் பணத்திலிருந்து மேலதிக நேரக் கொடுப்பனவுகள் எதுவும் செய்யப்படாமல் அது தொடர்பான செலவுகள் | அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | Out of Pocket முறை மூலம் எனவும். இத்தகைய கட்டணங்களுக்கு நோயாளி எழுத்து பூர்வமாக இணக்கத்தை வழங்குவதாக | |
| (உ) 2022 ஆம் ஆண்டில் பதவியணியினருக்கு கொடுப்பணவு செய்யப்பட்டிருந்த மொத்த ரூபா 514.55 மில்லியனான துறை சார் கட்டணங்களில் சபை வருமானத்துக்கு செலவு வைக்கப்பட்டிருந்த மொத்த சேவை கட்டணங்கள் ரூபா 773,312 மாத்திரமாகும். 1999 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்பட்டு வரும் துறைசார் கட்டணங்கள் 0.15 சதவீத சேவை கட்டணங்கள் காலரீதியில் திருத்தம் செய்வதற்கு வைத்தியசாலையின் நிர்வாகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | துறைசார் கட்டணங்கள் மூலம் உரிய சேவைக் கட்டணம் முகாமைத்துவ செலவினமொன்றாக அறவிடப்பட்ட போதும் இதற்காக செலவாகும் ஏனைய செலவினம் நோயாளிகளிடமிருந்தே அறவிடப்படுவதுடன் அதற்கு 35 சதவீத இலாப எல்லையை வைத்தியசாலை அறவிடுகின்றது எனவும் | வைத்தியசாலைசாலையால் துறைசார் கட்டணங்களுக்காக ஏற்கப்படுகின்ற நிர்வாக செலவினத்தை அறவிடுவதற்கு நடைமுறையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஊ) விசேட வைத்தியர்கள் மற்றும் ஏனைய உதவி பதவியணியினருக்கு திருப்பி செலுத்தப்பட்டிருந்த துறைசார்ந்த கட்டணங்களின் பேரில் உழைக்கும் போது செலுத்தும் வரி அறுவிடப்படாதிருந்துடன் 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்காக அவ்வாறு கழிக்கப்படாத இருந்த மொத்த உழைக்கும் போது செலுத்தும் வரி ரூபா 108.52 மில்லியன் ஆக இருந்தது. | இது தொடர்பான மேன்முறையீடு வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவில் விசாரணையொன்று இடம்பெற்று வருவதுடன் அது வழங்கும் தீர்மானத்தின் பிரகாரம் எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக. | வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவின் தீர்மானம் கிடைத்த பின்னர் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) உயிர் இரசாயன ஆய்வுகூடத்தில் காணப்பட்ட 04 உபகரணங்கள் நோயாளர் மாதிரி பரிசோதனை நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துதல் தொடர்பான பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) Fully Automated chemistry Analyser-Abbott Architect C 8000 உபகரணத்திற்குரிய நாளாந்த பயன்பாடு கவனத்தில் கொள்ளப்பட்டு திட்டவட்டமான காலம் ஒன்றுடன் | இந்த எண்ணின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள Abbott Architect C 8000 சாதனம் தொடர்பாக, அதன் தரவு சேமிப்பு திறன் சுமார் | தரவுகளை களஞ்சியப்படுத்த பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | உபகரணத்திலுள்ள தரவுகள் மற்றும் ஏனைய தரவுகள் களஞ்சிய பிரிவிற்கு பெற்றுக்கொள்ளல் (Backup பெற்றுக்கொள்ளல்) இடம் பெற்று இருக்கவில்லை | 50,000 என்றாலும், அந்த இயந்திரத்தால் செய்யப்படும் அனைத்து சோதனை தரவுகளும் அந்த நேரத்தில் மருத்துவமனை தரவு சேமிப்பக அமைப்புக்கு மாற்றப்படும் ஒரு அமைப்பு தற்போது நடைமுறையில் உள்ளது. தேவையான தரவு மருத்துவமனை தகவல் அமைப்பு மூலம் கிடைக்கிறது. | வேண்டும். |
| (ii) | அவ்வாறே இந்த உபகரணத்தினை அணுகுவதற்கு பெற்றுக் கொள்ள வேண்டிய ஆய்வுக்கூடத்தினால் MLT கடவுச் சொல்லுக்காக ADMIN என்ற பதம் பயன்படுத்தப்பட்டு தரவுகளை உட்படுத்தல் மாற்றுதல் மற்றும் அழிக்ககூடியதாக இருந்தமையால் உபகரண பயன்பாட்டில் எந்த அளவு பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதென என பரீட்சிக்க முடியாதிருந்தது. | எதிர்காலத்தில், பார்கோடு (Barcode) சிஸ்டம் மூலம் மட்டுமே அனைத்து சோதனைகளும் செய்யக்கூடிய வகையில், தேவையான முறைமை நாளதுவரையாக்க எதிர்பார்த்துள்ளதாக | உபகரணத்தை அணுகுவதற்கு கடவுச்சொல்லை பயன்படுத்தி உள்ளக கட்டுப்பாடொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (iii) | ஆய்வுகூடத்தினால் பராமரித்துச் செல்லப்படுகின்ற நுண்ணுயிர் கொல்லிகள் மற்றும் ஏனைய பாவனைப் பொருட்கள் வழங்கள் பதிவேடுகள் மீளாய்வாண்டில் நாளது வரையாக்கப்படாமை காரணமாக உபகரணங்களுக்காக எந்த திகதியில் நுண்ணுயிர் கொல்லிகள் வழங்கப்பட்டுள்ளது, புதிதாக நுண்ணுயிர் கொல்லிகள் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் பழைய நுண்ணுயிர் கொல்லிகளால் எந்தளவு பரிசோதனைகள் அளவு மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் நுண்ணுயிர் கொல்லிகளைக் கொண்டு எதிர்பார்த்த பரிசோதனை அளவினை பெற்றுக்கொள்ள முடியாததாக இருந்ததால் அதற்கு காரணமான விடயங்கள் என்ன என்பது தொடர்பாகவும் அவை வைத்தியசாலையின் முகாமைத்துவத்தின் கண்காணிப்புக்கு உட்படுகின்றதா என்பதை உறுதிப்படுத்தும் தகவல்களை வைத்தியசாலையிடம் காணப்படவில்லை | களஞ்சியத்திலிருந்து நுண்ணுயிர் கொல்லிகள் SYSTOLIC முறைமையால் விடுவிக்கப்படுகின்றன. இதுவரை நடத்தப்பட்ட சோதனைகளின் எண்ணிக்கையை முன்பு குறிப்பிட்டபடி கணினியிலிருந்து பெறலாம். அதன்படி, ஒரு செட் நுண்ணுயிர் கொல்லிகள் மூலம் செய்யப்படும் சோதனைகளின் எண்ணிக்கையைப் பெறக்கூடியதாக உள்ளதாகவும் செயலாற்றலை அளவிடுவதற்கு தேவையான தகவல்களை SYSTOLIC தரவு அமைப்பிலிருந்து தேவையான தகவல்களைப் பெறுவதற்கான திறனை வைத்தியசாலை முகாமைத்துவத்திற்கு உள்ளதாக | நுண்ணுயிர் கொல்லிகள் மற்றும் ஏனைய பாவனைப் பொருட்கள் வழங்கள் தொடர்பான பதிவேடு நாளது வரையாக்கல் மற்றும் கண்காணிப்புக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | வைத்தியசாலையில் நிறுவப்பட்ட தகவல்கள் முறைமை மூலம் வழங்கப்படும் தகவல்களின் சரியான தன்மை மற்றும் உரிய காலம் | ஒவ்வொரு மாதமும் 25 ஆம் திகதி வைத்தியசாலையின் அனைத்துப் பிரிவுகளிலும் | தரவு தகவல் முறைமைக்கு உள்ளடக்கும் போது திட்ட |

| | | | |
|---|---|---|---|
| | உறுதிப்படுத்தப்படும் வகையில் உரிய தரவு தகவல் முறைமைக்கு உள்ளடக்குதல் திட்ட வட்டமான காலப்பகுதி ஒன்று இல்லாமல் 11 சந்தர்ப்பங்களின் போது வைத்தியசாலை தகவல் முறைமைக்கு உள்ளடக்கப்பட்டிருந்தது. | உள்ள நுகர்வுப் பொருட்களின் நுகர்வு கணனி அமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டுமென சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டு அச்சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | வட்டமான காலப்பகுதி ஒன்றில் மேற்கொள்ள வேண்டும் |
| (v) | வைத்தியசாலை தகவல் முறைமையின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டில் Fully Automated Chemistry Analyser-Abbott C 8000 என்ற உபகரணத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட 27 வகை பரிசோதனைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற நுண்ணுயிர் கொள்ளை 27 வகைகளுக்குரிய 203 நுண்ணுயிர் கொல்லித் தொகுதிகள் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் (அவற்றின் கிரயம் ரூபா 16.19 மில்லியன்) ஆக இருந்தது. நியம பயன்பாட்டின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிசோதனை எண்ணிக்கை 291,164 ஆக இருந்த போதும் மாதாந்த புள்ளி விவரப் பட்டியல் தாளின் (Monthly Statistics Sheets) பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிசோதனை எண்ணிக்கை 127,804 அதாவது நியமப் பாவனையில் 44% மான குறைந்த சதவீதத்தை எடுத்து இருந்தது. வெளிவாரி நோயாளிகளுக்காக சேவை வழங்குவதன் மூலம் ஆய்வு கூட உபகரணங்களை செயற்திறனாக ஈடுபடுத்துவது தொடர்பில் வைத்தியசாலை முகாமைத்துவத்தினால் கவனம் செலுத்தப்பட்டு இருக்கவில்லை. | மேற்கொள்ளப்படும் பரிசோதனை தொடர்பான மாதாந்த தரவு அறிக்கை அந்த இயந்திரத்தில் சேமிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றதாகவும் கணக்காய்வு விசாரணையில் முன்மொழியப்பட்டுள்ள பிரகாரம் இயந்திரத்தின் நினைவக திறனை 200,000-300,000 அளவு வரை அதிகரிப்பதற்காக பொருத்தமான முறைமையொன்றை தேடிப் பார்ப்பதாக | அனைத்து உபகரணங்களையும் கூடிய மற்றும் செயற்திறனாகப் பயன்படுத்துவுதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | 2018 ஜூலை 16 ஆம் திகதிய 2080/22 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் பிரகாரம் சுத்திகரிப்பு சேவைகள் நிர்மாண சேவைகளில் ஈடுபடுவதற்காக அரசினால் அதிகரிக்கப்பட்ட படிகளை கொடுப்பனவு தொடர்பாக ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை 2018 ஆகஸ்ட் முதல் 2018 ஒக்டோபர் வகையான காலப்பகுதிக்காக ஊழியர் சேமலாப நிதிக்கு பணம் செலுத்தியதாக பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளாமல் ரூபா 2.30 மில்லியன் தொகை நிலுவை சுத்திகரிப்பு படிகளாக | சுத்திகரிப்பு வழங்குனருக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 2,304,335 தொகையை சான்றளித்த உத்தியோகத்தர் கணக்குத் பிரிவின் சேவையிலிருந்து இருந்து ஓய்வு பெற்றுச் சென்றுள்ளதாக | கொடுப்பனவை உறுதிப்படுத்துவதற்காக ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமையால் உரிய கம்பனியிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வழங்குனருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) வைத்தியசாலையின் வழக்கு தொடர்பாக சட்ட ரீதியான செயற்பாடுகளுக்குரிய கோவைகளை பரீட்சித்த போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே கட்டப்பட்டுள்ளன. | | |
| i 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்குரிய விசேட வைத்திய நிபுணர்களுக்கு செலுத்த வேண்டிய தொழில் சார் கட்டணங்கள் தொடர்பான முறைகேடு வெளிப்படுத்தப்பட்டதன் பின்னர் ஆரம்பப் புலனாய்வு ஒன்று 2012 ஆம் ஆண்டின் போது நடத்தி உரிய ஒழுக்காற்று பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் மோசடி செய்யப்பட்ட ரூபா 1.05 மில்லியன் தொகையை ஒரு மாதத்துக்குள் கொடுப்பனவு செய்வதற்கு தவறினால் அத்தகைய அறவிடுவதற்கு நீதிமன்ற செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இத்தொகையை அறவிடப்படாமல் இருந்ததுடன் 2015 ஆம் ஆண்டின் நுகேகொட மாவட்ட நீதிமன்றத்தின் வழக்கு 02 ஆண்டுகள் தாமதத்தின் பின்னர் தொடுக்கப்பட்டிருந்த வழக்குக்காக 2020/05/15, 2020/06/24, 2020/08/12 மற்றும் 2021/04/16 ஆம் திகதிகளில் உரிய சான்றுகளை சமர்ப்பிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் நிறுவனத் தலைவருக்கு கடிதம் அனுப்பி இருந்த போதும் தகவல்களை வழங்குவதற்கு ஓராண்டுக்கு மேற்பட்ட காலம் கடத்தப்பட்டிருந்தது. | கோப்பினை கண்டுபிடிக்க முடியாமையால் வழக்கு தொடருவதில் தாமதம் ஏற்பட்டதாகவும் ஆவணங்களை பரிசோதிக்கையில் இந்த வழக்கு 2015 ஆம் ஆண்டில் தொடரப்பட்டதாக தென்படுவதாகவும் . குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் வழக்கு தாக்கல் செய்யப்பட்டதால் கால வேறுபாடொன்று ஏற்பட்டிருக்கவில்லை. | நீதிமன்ற செயற்பாடுகள் தொடர்பாக நிறுவனத்தினால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும் |
| ii ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையில் முகாமைத்துவ உதவியாளர் ஒருவராக சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர் பண மோசடி ஒன்றை மேற்கொண்டமை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப பரிசோதனை மற்றும் ஒழுக்காற்று பரிசோதனையின் பின்னரும் 2013 ஜுலை 24 ஆம் திகதி முதல் சேவையிலிருந்து நீக்கப்பட்டிருந்தார். உத்தியோத்தரால் இது தொடர்பாக ஹோமாகம தொழில் நியாய சபையில் கொடுக்கப்பட்ட வழக்கு மற்றும் | இந்த வழக்கில் சேவை வகையின்றி சேவை புரிந்த இடத்திலேயே சேவை புரிந்த பதவியில் தற்போதய சம்பள விகிதத்தில் ரூபா 1,989,309/- ஆன சம்பளத்துடன் திருப்பிச் செலுத்துதலுடன் மீண்டும் சேவையில் அமர்த்துமாறு தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது, அதன் பிரகாரம் நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் | முறையான ஆரம்ப பரிசோதனை ஒன்று மேம்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதற்காக வைத்தியசாலையால் தொடுக்கப்பட்ட மேன்முறையீட்டு வழக்கின் கட்டளையின் பிரகாரம் சேவை வகை ஒன்று இல்லாமல சேவை இருந்த பதவியில் தற்போதைய சம்பள அளவில் ரூபா 1.98 மில்லியன் சம்பளத்துடன் விண்ணப்பதாரரை மீண்டும் சேவையில் ஈடுபடுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டு இருந்தது அதன் பிரகாரம் சேவையில் ஈடுபடுத்தப்படாத காலப்பதிக்காக சம்பளமாக ரூபா 1.98 மில்லியன் விளைவற்ற செலவிமொன்றை மேற்கொள்வதற்கு வைத்தியசாலைக்கு நேர்ந்திருந்தது. | விண்ணப்பதாரிக்கு பின்சம்பளத்துடன் சேவையில் அமர்த்துவதற்கு சேவை வழங்குனருக்கு பணியமர்த்த நேர்ந்ததாக | |
| (ஈ) | வைத்தியசாலையின் நிர்வாக நடவடிக்கைகளை நடத்திச் செல்லும் நோக்கத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் 2021 மே 8 ஆம் திகதி வைத்தியசாலையால் பொறுப்பேற்கப்பட்டிருந்த போதும் இந்த அறிக்கை திகதி வரையில் நோக்கத்திற்குட்பட்ட செயற்பாட்டுக்கு பயன்படுத்தாமல் விளைவற்று காணப்பட்டது. | நிலமாடி ஆரம்ப மதிப்பீட்டின் பேரில் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காக தற்போது பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் மெலும் ஆரம்ப மற்றும் இரண்டாம் மாடியிலும் ஆரம்ப திட்டத்தில் பயன்படுத்துவதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் தேவைப்பட்டால், Primary Care Centre இற்கு பயன்படுத்துவதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளதாகவும் | கட்டிடத்தை செயற்திறனாக அங்கீகரிக்கப்பட்ட செயற்பாடுகளுக் காக பயன்படுத்துவதற் கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | வைத்திய பதவியணியினர், தாதியர் மற்றும் குறை நிரப்பு உதவி வைத்திய சேவையின் பதவியணியினருக்கு மேலதிக கடமை படிகள், மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தின படிகள் கொடுப்பனவு தொடர்பான கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. | | |
| | (i) 1996 ஜுலை 17 ஆந் திகதிய 96/1347/120/143 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் வெவ்வேறு தரங்கள் மற்றும் சுகாதார அமைச்சின் வெவ்வேறுபட்ட சமமான தரங்கள் அல்லது ஏனைய திணைக்களங்களில் சமமான பதவிகளுக்கு இடையே சம்பள விலகல் 35 சதவீதமான அளவில் பேணி செல்வதற்கு பொது கொள்கை | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதத்திற்கு 35 சதவீதம் சேர்க்கப்பட்டு மேலதிக மணித்தியால விகிதம் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பிரகாரம் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | குறித்த அதிகார அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஒன்றாக தீர்மானிக்கப்பட்டிருந்தது 2018 மார்ச் 15 ஆந் திகதி 402:2:17 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் சுகாதார அமைச்சின் பொது சுற்றறிக்கையின் கீழ் வைத்தியர் தாதி மற்றும் குறைநிரப்பு வைத்திய சேவையின் உத்தியோகத்தர்களுக்கு கொடுப்பனவு செய்யப்படும் மேலதிக கடமை படிகள் மற்றும் மேலதிகநேர பணிகள் என்பவற்றிக்காக 35 சதவீதம் சேர்க்கப்பட்டு சுற்றறிக்கை மூலம் வழங்கப்படும் படிகளை விட உயர்ந்த விகித பெறுமதியின் வைத்து முறையே 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் ரூபா 143.55 மில்லியன் ரூபா 168.45 மில்லியன் மற்றும் ரூபா 159.21 மில்லியன் என கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக அமைச்சரவை அங்கீகாரம் ஒன்று அல்லது பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் ஒன்றையோ பெற்றுக் கொண்டமைக்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை | | |
| (ii) | கணக்காய்வினால் தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பிரதான சத்திர சிகிச்சை கூடத்தில் நடத்திச் செல்லப்படும் கொடுப்பனவு வார்டுகளின் சத்திர சிகிச்சை தொடர்பான பதிவேடு மற்றும் வைத்திய பதவியணியினரின் மேலதிக கடமை கொடுப்பனவு உறுதிசீட்டுகளுடன் ஒப்பிடும் போது மேலதிக கடமை படிகள் பெற்றுக் கொண்ட கால எல்லைக்குள் வைத்திய பதவியணியினரால் தனியார் சேவையில் ஈடுபட்டு சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டதற்காக துறை சார் கட்டணங்களாக ரூபா 5.45 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது. | சத்திரசிகிச்சை அறை மற்றும் கணக்கீட்டு துறைக்கு இடையே நேரடி ஒருங்கிணைப்பு அமைப்பு உருவாக்கப் பட்டுஇந்த நடவடிக்கைகளின் ஒழுங்குபடுத்தல் செயற்பாடு தொடங் கப்பட்டுள்ளதாகவும் அதன்படி, எதிர்காலத்தில் இச்செயற்பாடு முறையான வகையில் மேற்கொள்வதாக | இப்பணத்தை வைத்தியசாலை வருமானத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | வைத்திய பதவியணியினருக்கு விடுமுறை தினப்படிகள் கொடுப்பனவு தொடர்பாக செய்யப்பட்ட தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் போது சில வைத்திய உத்தியோகத்தர்களால் விடுமுறை தினப் படிகள் பெற்றுக் கொள்ளும் கால எல்லைக்குள் தனிப்பட்ட சேவைகளில் ஈடுபட்டு துறைசார் படிகளை அறவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது தெரிவு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பிரதான சத்திர சிகிச்சை கூடத்தில் செலுத்தும் வார்ட்களில் சத்திர | மேலே குறிப்பிட்ட ஒழுங்குபடுத்தலின் போது அச்சிக்கல்களை தீர்வுசெய்யக்கூடியதாக இருந்தது. | இப்பணத்தை வைத்தியசாலை வருமானத்திற்கு செலவு வைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

சிகிச்சை பதிவேட்டின் பிரகாரம் அவ்வாறு 07 வைத்திய உத்தியோகத்தர்களால் அறவிடப்பட்டிருந்த துறைசார் படிகள் ரூபா 2.96 மில்லியன் ஆக இருந்தது.

| | 2018 | 2019 | 2020 | 2021 | 2022 |
|---|---|---|---|---|---|
| வைத்தியசாலையில் கட்டில்களின் எண்ணிக்கை | 1,061 | 1,065 | 1,072 | 993 | 1008 |
| கட்டில் பயன்பாடு (%) | 66 | 69 | 52 | 54 | 55 |
| அனுமதிக்கப்பட்ட நோயாளர்கள் எண்ணிக்கை | 58,849 | 62,466 | 45,976 | 39,916 | 42,633 |
| சிகிச்சைக்காக வந்த நோயாளிகள் | 182,170 | 190,716 | 138,502 | 136,085 | 153,143 |
| வெளிவாரி நோய் பிரிவுக்கு வந்த நோயாளிகளின் எண்ணிக்கை | 22,992 | 23,010 | 16,307 | 13,337 | 19,537 |
| முழு மரணங்களின் எண்ணிக்கை | 745 | 847 | 594 | 813 | 721 |
| மேற்கொள்ளப்பட்ட வெவ்வேறு பரிசோதனைகளின் எண்ணிக்கை | 1,507,104 | 1,663,27 | 1,244,598 | 1,241,800 | 1,251,270 |
| மேற்கொள்ளப்பட்ட வெவ்வேறு சத்திர சிகிச்சைகளின் எண்ணிக்கை | 15,231 | 15,347 | 12,388 | 11,109 | 13,100 |

**(ஊ) மீளாய்வாண்டிலும் முன்னைய 05 ஆண்டுகளலிலும் வைத்தியசாலையின் ஒட்டுமொத்த செயலாற்றல் பின்வருமாறு இருந்தது.**

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன

| | | | |
|---|---|---|---|
| (i) | 2018 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2022 ஆம் ஆண்டில் வைத்திய சாலைகளில் கட்டில்களின் எண்ணிக்கை 5 சதவீதத்தினாலும் கட்டில்களின் பயன்பாடு 11.5 சதவீதத்தினாலும் குறைவடைந்து இருந்தது. 2021 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2022 ஆம் ஆண்டில் கட்டில்களின் எண்ணிக்கை 15 சதவீதத்தினால் அதிகரத்திருந்ததுடன் கட்டில் பயன்பாடு 1 சதவீதத்தால் அதிகரித்து இருந்தது. | கொவிட் தொற்று சமயத்தில் கட்டில்களுக்கு இடையே இடைவெளி அதிகரிப்பதற்கு அவசியமானதால் இந்த வகையில் கட்டில் எண்ணிக்கை குறைவடைந்துள்ளதாக | வைத்தியசாலைக்கு நோயாளர் வருகையை அதிகரிக்க கூடிய வேலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத்தி செயற்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | வைத்தியசாலையால் செய்யப்படும் பரிசோதனைகள் மற்றும் சத்திர சிகிச்சைகளின் செயன் முன்னேற்றத்தில் குறைவொன்று அவதானிக்கப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டுக்கு ஒப்பாக 2022 ஆம் ஆண்டில் 9,470 பரிசோதனைகளும் சத்திர சிகிச்சைகளில் 1991 ஆன அதிகரிப்பொன்றும் அவதானிக்கப்பட்டன | இந்த அவதானிப்புடன் இணங்குவதாக | வைத்தியசாலைக்கு நோயாளர் வருகையை அதிகரிக்க கூடிய வேலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத்தி செயற்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 2021 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக வைத்தியசாலைகளுக்கு அனுமதிக்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை, சிகிச்சைக்காக வருகை தந்த நோயாளிகளின் எண்ணிக்கை மற்றும் வெளிவாரி பிரிவுக்கு வருகை தந்த நோயாளிகளின் எண்ணிக்கை முறையே 7, 13 மற்றும் 46 சதவீதத்தால் அதிகரித்திருந்தன. . | கொவிட் தொற்று எரிபொருள் சிக்கல் காரணமாக வைத்தியசாலைக்கு நோயாளர் வருகை குறைவடைந்து உள்ளதாக எனினும் 2021 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2022 ஆம் ஆண்டில் | வைத்தியசாலைக்கு நோயாளர் வருகையை அதிகரிக்க கூடிய வேலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத்தி செயற்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அனுமதிக்கப்பட்ட நோயாளர்கள் மற்றும் சிகிச்சை நோயாளிகளின் அதிகரிப்பொன்று இடம் பெற்றுள்ளதாக | |

### 3.3 பெறுகை முாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020/2021 ஆம் ஆண்டிற்காக ரூபா 4.65 மில்லியன் தொகைக்கு கழிவுகளை அகற்றுவது தொடர்பான ஒப்பந்தம் வழங்கப்பட்ட தனியார் கம்பெனிக்கு 2022/2023 ஆம் ஆண்டிற்காக ஒப்பந்தம் ரூபா 7.25 மில்லியன் தொகைக்கு வழங்கப்பட்டிருந்தது அது தொடர்பான பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) வைத்தியசாலையில் நாளொன்றிற்கு அகற்றப்படும் கலப்பு கழிவு 400-500 கிலோ கிராம்களுக்கு இடையில் இருப்பதாக பொதுச் சுகாதார பரிசோதகரால் இனங் கானப்பட்டிருந்த போதும் உடன்படிக்கையின் பிரகாரம் 5,000 கிலோகிராம் ஏற்றக்கூடிய ஒரு வண்டி நாளாந்தம் வைத்தியசாலைக்கு வருவது அவதானிக்கப்பட்டது அதன் பிரகாரம் கேள்வி கோருவதற்கு முன்னர் நாளாந்தம் வைத்தியசாலையில் சேரும் அளவினை ஆய்வு செய்து வைத்தியசாலையில் தேவைப்பாடு இனங்காணப்பட்டு அதன் பிரகாரம் பெறுகை செய்யப்படாமையால் வைத்தியசாலைக்கு நட்டம் ஏற்பட்டிருந்தது. | இந்த நடவடிக்கையால் மருத்துவமனைக்கு நிதி பாதிப்பு ஏற்படும் என கண்டறியப்பட்டுள்ளது. இதனடிப்படையில், மஹரகம பிரதேச செயலாளர், அபேக்ஷா வைத்தியசாலையின் பணிப்பாளர் மற்றும் மஹரகம பிரதேச சபையின் உத்தியோகத்தர்களை சந்தித்து கழிவு அகற்றும் முறை தொடர்பில் கலந்துரையாப்பட்டது. அதில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்திய பின்னர் கழிவு அகற்றல் தொடர்பான இணக்கப்பாட்டிற்கு வருவதற்காக எதிர்பார்த்துள்ளதாக. | நாளாந்தம் சேரும் கழிவுகளின் அளவினை ஆய்வு செய்து திட்டவட்டமான ஒப்பந்தங்களை வழங்க வேண்டும் |
| (ii) கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக லொரி வண்டி நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் வைத்தியசாலைக்கு வர வேண்டிய போதிலும் தெரிவு பரிசோதனையின் பிரகாரம் 70 நாட்கள் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் வருகை தராத இருந்தமை அவதானிக்கப்பட்டதால் உடன்படிக்கையின் 7 (ஆ) பிரகாரம் குறித்துரைக்கப்பட்ட மேற்பார்வை செயற்பாடு இடம்பெற்றிருக்கவில்லை. | சரியான நேரத்தில் அதாவது மாலை 3.00 -6.00 மணிக்குள் வந்து கடமையைச் செய்யுமாறு மருத்துவமனையினால் தெரிவிக்கப்பட்டதன் பின்னர் இந்த விடயம் பெரும்பாலும் சரி செய்யப்பட்டுள்ளது.. குப்பைகளை ஏற்றும் போது பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் பொது சுகாதார பரிசோதகரின் மேற்பார்வையின் கீழ் இச்செயற்பாடு முறையாக நிறைவேற்றப்படுவதாக | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதுடன் மேற்பார்வை செய்யப்பட வேண்டும். |
| (iii) பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.8 வழிகாட்டலின் பிரகாரம் ஒப்பந்தம் நிறைவு பெறுவதற்கு | இதில் தவறு நடந்துள்ளது என்பதை ஏற்றுக்கொள்வதாக. அடுத்த கேள்விகளில் இது | பெறுகை வழிகாட்டல் கோவையின் |

| | | |
|---|---|---|
| எதிர்பார்க்கப்பட்ட தினத்திற்கு பின்னர் உள்ள 28 நாட்கள் செல்லுபடியாகும் வகையில் செயலாற்றல் பிணை ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பிணை பாதுகாப்பின் மூலம் குறித்த காலப்பகுதி மேவுகை செய்யப்பட்டிருக்கவில்லை. | தொடர்பாக கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2020/2021 ஆம் ஆண்டுக்குரிய தனியார் கம்பனி ஒன்றுடன் மேற்கொள்ளப்பட்டிருந்த 2020 திசெம்பர் 30 ஆம் திகதிய பாதுகாப்பு சேவை வழங்கள் உடன்படிக்கை பிரகாரம் மாதாந்தம் ரூபா 2.46 மில்லியன் வெட் உடன் ஒப்பந்த பெறுமதிக்கு 2020 நவம்பர் 01 ஆம் திகதி முதல் ஓராண்டு காலப்பகுதிக்கு சேவைகள் வழங்குவதற்கு இணங்கப்பட்டு இருந்தது இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன | | |
| (i) வருடாந்த பெறுகை திட்டம் ஒன்று இல்லாமல் 14 மாதங்களுக்காக அவ்வப்போது காலத்தை நீடித்து பாதுகாப்பு சேவை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த துடன் 2 சந்தர்ப்பங்களின் போது நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் சேவை உடன்படிக்கை ஏற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பான பெறுகை நடவடிக்கைகள் ஏற்கனவே இருந்த ஒப்பந்தம் முடிவடைவதற்கு சுமார் 4 மாதங்களுக்கு முன்பே தொடங்கப்பட்டது, எனினும் ஏல ஆவண பரிந்துரைகள் பெறுவதில் தாமதம் மற்றும் ஏல மதிப்பீட்டு நடவடிக்கைகளில் காணப்பட்ட தாமதம் காரணமாக, ஏற்கனவே உள்ள ஒப்பந்தத்தை நீடிக்க வேண்டியிருந்தது. ஐந்து சந்தர்ப்பங்களில் ஒப்பந்தம் நீட்டிக்கப்பட்டுள்ளதாகவும், தற்போது இதுபோன்ற தவறுகளைத் தடுக்க தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | வருடாந்த பெறுகைகளை மேற்கொள்வதற்கும் உடன்படிக்கைகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) சேவை உடன்படிக்கையின் 2 (c) பிரிவின் பிரகாரம் மாதாந்த பட்டியல் சமர்ப்பிக்கும் போது கடந்த மாதத்திற்கு உரிய ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றை சேவை வழங்கும் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள போதும் குறித்த உறுதிப்படுத்தல் பெற்றுக் கொள்ளப்படாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | சம்பந்தப்பட்ட சேவை வழங்குநரிடமிருந்து ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் உறுதிப்படுத்தும் சான்றிதழை பெற்றுக் கொண்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக. . | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (iii) 2021/2022 சேவை உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் பகல் காலப்பகுதியில் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டிய ஊழியர்களின் எண்ணிக்கை 42 ஆக இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் 7 மாதங்களில் பகல் காலங்களில் சேவை ஈடுபட்டு இருந்த ஊழியர்கள் எண்ணிக்கை 21 இற்கும் 38 இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன அதன் பிரகாரம் எதிர்பார்த்தபடி உரிய பாதுகாப்பு சேவை ஒன்று குறித்த கம்பெனியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டதா என்பது சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது. | குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்களுக்கு மாதந்தம் செலுத்தப்படும் தொகையில் இருந்து தண்டப்பணம் விதிக்கப்படும் என்றும், தேவையான எண்ணிக்கையிலான பணியாளர்களை பராமரித்துச் செல்ல தொடர்ந்தும் அறிவுறுத்தல்கள் வழங்கப்படுவதாக | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் 2021/2022 மற்றும் 2022/2023 ஆம் ஆண்டுகளுக்குரிய வைத்திய சாலையின் சுத்திகரிப்பு சேவை இரண்டு தனியார் நிறுவனங் களுக்கு வழங்கப்பட்டிருந்தன இக் கம்பனிகளால் வைத்தியசாலையில் சுத்திகரிப்பு சேவைகள் பராமரித்து செல்லல், வைத்தியசாலையால் இந்த சேவையை பெற்றுக் கொள்வதில் மற்றும் அதற்காக கொடுப்பனவு செய்தல் தொடர்பான பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (i) சுத்திகரிப்பு சேவைகளை வழங்கும் போது பயன்படுத்தப்படுகின்ற அனைத்து சுத்திகரிப்பு இரசாயன பொருட்கள் இலங்கை தரக் கட்டளைகள் நிறுவனத்தின் அல்லது கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் அங்கீகாரம் மற்றும் அவற்றின் தரம் தொடர்பாக உறுதிப்படுத்தப்பட்டு உடன்படிக்கை நிபந்தனை ஒன்றாக ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக உறுதிப்படுத்துவதற்கு தேவையான இரசாயன ஆய்வுகூட பரிசோதனை அறிக்கை கேள்வி ஆவணங்கள் மூலம் கோரப்படாமை காரணமாக கேள்விதாரர்களால் வழங்குவதற்கு இணங்கப்பட்ட சுத்திகரிப்பு இரசாயன பொருட்கள் இலங்கையின் தரத்திற்கு (SLS Standards) இணங்கியுள்ளதாக மற்றும் சுத்திகரிப்பு இரசாயன பொருட்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட விலை விபரங்கள் நியாயமானதா என்பதை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கேள்வி கோரும் போது இது தொடர்பில் கவனத்தில் கொள்ளப்படவில்லை யென்பதை ஏற்றுக்கொள்வதுடன் ஒப்பந்தத்தை நிறைவேற்றும் போது வழங்கப்பட்ட மாதிரிகள், உரிய ஆய்வுக்காக ITI இற்கு அனுப்பப்பட்டுள்ளது எதிர்கால கேள்விகளில் கேள்வி நிபந்தனைகளில் உள்ளடங்கிய விடயங்களை பரிசீலித்து, கருத்திற் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக | பயன்படுத்துகின்ற அனைத்து சுத்திகரிப்பு இரசாயன பொருட்கள் இலங்கை தரக் கட்டளைகள் நிறுவனத்தின் அல்லது கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்றிருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | வழங்குனர்களால் வழங்கப்பட வேண்டிய சுத்திகரிப்பு இரசாயன பொருட்கள் தொடர்பான குறைந்த நியதிகள் இல்லாதிருக்கையில் உடன்படிக்கை பிரகாரம் அவ்வப்போது சுத்திகரிப்பு இரசாயனப் பொருட்களின் தரம் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டு இருக்கவில்லை 06 சுத்திகரிப்பு இரசாயன பொருட்களுக்குரிய கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்த ஆய்வு கூட பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் 5 இரசாயன பொருட்கள் குறித்து நிர்ணயிக்கப்பட்ட தரத்துடன் இல்லாமல் இருந்ததாக உறுதிப்படுத்தப்பட்டு இருந்தது 2021/2022 உடன்படிக்கை செய்யப்பட்ட ஆண்டிற்காக மேற்படி இரசாயன பொருட்களுக்காக வைத்தியசாலையால் வழங்குனருக்கு செலுத்தப்பட்ட ரூபா 665,639 தொகை சிக்கனமற்ற செலவினமாக அவதானிக்கப்பட்டதுடன் 2022/2023 ஆண்டு உடன்படிக்கைக்க உரியதாக தரம் தொடர்பாக பரிசோதனை ஒன்று இன்றி இரசாயனப் பொருட்கள் பெற்றுக் கொள்ளப்பட்டு 2022 திசெம்பர் மற்றும் 2023 ஜனவரி மாதத்திற்காக ரூபா 338,900 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கேள்வி கோரும் போது இது தொடர்பில் கவனத்தில் கொள்ளப் படவில்லை யென்பதை ஏற்றுக்கொள்வதுடன் ஒப்பந்தத்தை நிறைவேற்றும் போது வழங்கப்பட்ட மாதிரிகள், உரிய ஆய்வுக்காக ITI இற்கு அனுப்பப்பட்டுள்ளது எதிர்கால கேள்விகளில் கேள்வி நிபந்தனைகளில் உள்ளடங்கிய விடயங்களை பரிசீலித்து, கருத்திற் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக | உடள்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | வைத்தியசாலைக்கு மாதாந்தம் கிடைக்கும் சுத்திகரிப்பு இரசாயன பொருட்களின் இருப்பு வைத்தியசாலையின் பொது சுகாதார பரிசோதகரின் பொறுப்பிலும் சுத்திகரிப்பு சேவை வழங்கும் நிறுவனத்தின் பொறுப்பிலும் வைக்கப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக 2023 ஜனவரி 25 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனைகளின் போது வைத்தியசாலைக்கு சொந்தமாக காணப்பட்ட இருப்புகளின் அளவினை விட வைத்தியசாலை கணினி முறைமை மூலம் அத்திகதயில் காண்பிக்கப்படும் இருப்பிற்கு இடையே 5 லிட்டர் முதல் 160 லீற்றர் வரையான | துப்புரவுப் பொருட்கள் தொடர்பான கணினி முறைமையை முறையாகப் புதுப்பித்து, மீண்டும் இதுபோன்ற இருப்பு மீதிகள் முரண்பாடுகள் மீள ஏற்படாமல் தடுக்க சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக | இரசாயன இருப்பு பொருட்கள் முறையான உள்ளக கட்டுடன் பேணிச்செல்ல வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அளவிலான வேறுபாடு அவதானிக்கப்பட்டது | | |
| (iv) | உடன்படிக்கை நிபந்தனை (ஊ) பிரகாரம் வழங்குனரால் வழங்கப்படுகின்ற சுத்திகரிப்பு இரசாயன பொருட்கள் மற்றும் உபகரணங்கள் ஒவ்வொரு பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரிவு தலைவர்களுக்கு வைத்தியசாலை களஞ்சிய பொறுப்பாளரால் வழங்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் வைத்தியசாலையில் காணப்படும் வழங்குனரின் களஞ்சியத்திற்கு சுத்திகரிப்பு பொருட்கள் எவ்வித அடிப்படை ஒன்றும் இல்லாமல் வழங்கப்பட்டிருந்தது அதன் போது வழங்குனரின் களஞ்சியத்தில் எஞ்சிய இருப்பு தொடர்பாக கருத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை இதன் காரணமாக முன்னைய ஆண்டுகளுக்கு உரித்தாகும் 245 லீற்றர் Glass Cleaner இருப்பு ஒன்று வழங்குனரின் களஞ்சியத்தில் காணப்பட்டதுடன் மாதாந்த தேவைப்பாட்டை மிகைத்த சுத்திகரிப்பு இரசாயன பொருட்கள் களஞ்சியத்தில் காணப்படுவது அவதானிக்கப்பட்டதுடன் மாதாந்தம் வழங்க வேண்டிய சுத்திகரிப்பு இரசாயன பொருட்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குனரின் விருப்பின் பிரகாரம் வைத்தியசாலைக்கு வழங்குவதற்கு இடம் அளித்தமை, வைத்தியசாலையின் கணணி முறைமை மூலம் வெளிப்படுத்தப்படாத சுத்திகரிப்பு இரசாயன பொருட்கள் இருப்பு காணப்பட்டமை மற்றும் முறையான மேற்பார்வையின்றி மாதாந்த தேவைப்பாட்டை மிகைத்து சுத்திகரிப்பு இரசாயன பொருட்கள் இருப்புக்களை பேணி செல்வதற்கு இடம் அளித்திருந்தமையால் சுத்திகரிக்கும் பொருட்கள் தொடர்பான வெவ்வேறு முறைகேடுகள் இடம் பெறக்கூடிய ஆபத்தொன்று காணப்பட்டது. | இந்த துப்புரவு பொருட்கள் பிரதான களஞ்சியத்தின் மூலம் மருத்துவமனை பிரிவுகளின் தலைவர்களுக்கு மாத்திரமே வழங்கப்படுகின்றன. துடைப்பம், துடைப்பான் போன்ற பொருட்கள் மருத்துவமனையின் பிரிவுத் தலைவர்கள் கணனி முறைமை மூலம் கட்டளை இட்ட பிறகே பிரதான களஞ்சியத்தில் இருந்து பொது சுகாதார பரிசோகருக்கு சுத்திகரிப்பு பொருட்கள் வழங்கப்படுவதுடன் தேவையேற்படின் பொது சுகாதார பரிசோதகரால் வழங்குனரின் களஞ்சியத்திற்கு பொருட்கள் வழங்கப்படுகின்றன. பிரதான களஞ்சியத்தில் உள்ள இருப்பு மற்றும் பிரிவுத் தலைவர்களின் கட்டளைகளை கணக்கில் எடுத்துக்கொண்டு எதிர்கால கட்டளைகளை பிரதான களஞ்சியம் கருத்திற் கொள்ளபடுகிறது.<br><br>எனினும், சுத்திகரிப்புப் பொருட்களை உரிய மேற்பார்வையுடன் கையாளுமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | உடள்படிக்கை நிபந்தனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

(ஈ) 2016 நவம்பர் 03 ஆந் திகதி ரூபா 23.54 மில்லியன் வெற் உடன் தொகைக்கு தனியார் நிறுவனம் ஒன்று இடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு இருந்த சிகிச்சை கழிவுகளை எரிக்கும் இயந்திரம் 2016 திசெம்பர் முதல் இதுவரை தனியார் நிறுவனம் ஒன்று மற்றும் வைத்தியசாலை பதவியணியினாலும் பயன்படுத்தப்பட்டு வைத்தியசாலை சிகிச்சை கழிவுகள் எரிக்கப்பட்டிருந்தன. இந்த இயந்திரத்தின் பயன்பாடு மற்றும் பராமரிப்பு தொடர்பான பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (i) | இயந்திரத்தின் பராமரிப்பு நடவடிக்கைகளை குறைந்த கிரயத்திலும் செயற் திறனாகவும் வைத்தியசாலையின் பராமரிப்பு பணியாளர்கள் மூலம் மேற்கொள்ள முடியும் என்பதாக குறிப்பிட்டு இயந்திரத்தினை கொள்வனவு செய்யும் போது பராமரிப்பு சேவைக் கிரயத்தை உள்ளடக்கி இயந்திரத்தை கிரயத்தை மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படாதிருந்ததுடன் பராமரிப்பு சேவை உடன்படிக்கை இன்றி இயந்திரத்தை மாத்திரம் கொள்வனவு செய்வதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவால் பரிந்துரைக் கப்பட்டிருக்கையில் 02 வருட உத்தரவாத காலத்தில் பின்னர் 6 ஆண்டுகள் வரையான பராமரிப்பு சேவை உட்பட குறைந்த விலை கேள்வியான ரூபா 26.35 மில்லியனான கேள்வி நிராகரிக்கப்பட்டு இருந்தது. 2023 பெப்ரவரி 10 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருந்த சேவை உடன்படிக்கையின் பிரகாரம் மொத்தம் ரூபா 4.01 மில்லியன் சேவை கட்டணமாக வைத்தியசாலையால் செலவிடப்பட்டு இருந்தது அதன் பிரகாரம் இயந்திரத்தை கொள்வனவு செய்யும்போது பராமரிப்புச் செலவினத்தை இயந்திரத்தின் விலையுடன் சேர்க்கப்படாமல் மதிப்பீடு செய்தமையால் 6 ஆண்டு காலங்களுக்குள் ரூபா 10 மில்லியன் ஆன தொகை ஒன்றினை வைத்திய சாலைக்கு சேமிக்க கூடிய இருந்தமையால் | இந்த முதற்கட்ட கேள்வியில் தொழில்நுட்பக் குழு பரிந்துரைகள் மற்றும் பெறுகை குழு அங்கீகாரங்கள் செயற்திறனாக செயற்படுத்தப்படவில்லை என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். இதன்படி போதிய வைத்தியசாலை பணியாளர்கள் இல்லாததாலும் வேறு தெரிவுகள் இல்லாததாலும் வழங்குனருடனான சேவை உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டதால் சேமிக்கப்படும் என எதிர்பார்த்த ரூபா 10 மில்லியன் அளவில் வைத்தியசாலைக்கு சேமிக்க முடியவில்லை என்பதை ஏற்றுக் கொள்வதாக | இயந்திரங்களின் கிரயத்தை கணிப்பிடும் போது பராமரிப்பு சேவை கிரயம் தொடர்பாக மதிப்பீட்டிற்கு உட்படுத்த வேண்டியதுடன் வைத்தியசாலைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பெறுகை தீர்மானம் எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் தீர்மானம் செயற்திறனாக இருக்கவில்லை. | | |
| (ii) | சிகிச்சை கழிவு எரிக்கும் இயந்திரம் (incinerator) மூலம் வைத்தியசாலையில் நாளாந்தம் சிகிச்சை கழிவு பொருட்களின் எரிப்பு மேற்கொள்ளப்படுவதன் அதில் எஞ்சும் சாம்பல் வெளியேற்றப்படும் கொங்கிரிட் குழிகள் தற்போது பூரணமாக நிரம்பி உள்ளதால் தற்போது முறையான நடைமுறை இன்றி வைத்தியசாலை சுற்றாடலில் பாதகமான வகையில் சாம்பல் வெளியேற்றப்பட்டு இருந்தது. இயந்திரத்தில் இருந்து அகற்றப்படும் சாம்பல் திறந்த வெளிகளில் குவித்து வைப்பதால் அடுத்த மழையுடன் கூடிய காலப்பகுதியில் வைத்தியசாலை வளவில் சுகாதாரத்துக்கு பாதிப்பினை ஏற்படுத்தக் கூடியதாக இருப்பதாகவும் அதன் காரணமாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் இருந்து பெற்றுக் கொண்ட சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தை (EPL) புதுப்பிக்கும் போது நிபந்தனை மீறப்பட்டதன் பேரில் கழிவு பொருள் எரிக்கும் இயந்திரத்தை செயற்படுத்தும் அனுமதி இல்லாமல் போகும் ஆபத்து ஒன்று காணப்படுவதாக கணக்காயின் போது அவதானிக்கப்பட்டது | மேற்கூறிய எரியூட்டும் இயந்திரம் (Clinical Waste Incinerator) முறையாக செயல்படவில்லை, சம்பந்தப்பட்ட நிறுவனத்தால் பலமுறை திருத்தம் செய்யப்பட்டும் இதுவரை பலனளிக்கவில்லை. இதன் விளைவாக, மருத்துவக் கழிவுகள் சரியாக எரிக்கப்படுவதில்லை மற்றும் எரியூட்டியானது கூடுதல் கார்பன் கொண்ட எரிந்த பகுதிகளை சாம்பலில் விட்டுச் செல்கிறது. அதனால், சாம்பல் குழி (Ash pit) விரைவில் நிரம்புவதுடன் அதில் உள்ள சாம்பலை அகற்றுவதில் சிக்கலான நிலைமையொன்று உருவாகியுள்ளதாக | சுற்றாடலுக்கு பாதகமில்லாத வகையில் கழிவுப்பொருட்களை வெளியேற்றுவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று தயாரிக்க வேண்டும். |
| (உ) | வைத்தியசாலையின் வேலைத் தளம் மற்றும் பூங்கா சுத்திகரிப்பு பதவியணியினருக்காக அலுவலகத்தை நடத்திச் செல்வதற்காக இரண்டு மாடி கடடிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 87.02 மில்லியன் வெற் உடன் தொகைக்கு 2016 நவம்பர் 09 ஆம் திகதி ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் கட்டிட நிர்மாண ஆரம்பத்தின் போது வேலைத்தளங்கள் காணப்பட்ட கட்டிடங்களை உடைத்து அகற்றப்பட்ட காரணத்தினால் மாதம் ஒன்றுக்கு ரூபா 257,000 தொகைக்கு 12 கொள்கலன்கள் வாடகைக்கு பெறப்பட்டிருந்தன உடன்படிக்கையின் பிரகாரம் 2018 ஏப்ரல் மாதம் வரை கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமை காரணமாக 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரை 56 மாதங்களுக்காக ரூபா 14.39 மில்லியன் மேலதிக வாடகை | குறித்த ஒப்பந்தத்தை குறித்த காலத்திற்குள் முடிக்காத காரணத்தினால், கொள்கலனின் வாடகை காலத்தை நீடிக்க வேண்டியிருந்ததாக தற்போது பல கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் | நிர்மாண நிர்ணயிக்கப்பட்ட காலஎல்லைக்குள் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

செலவினமொன்றை மேற்கொள்ள நேர்ந்தது.

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெற்றிடமான பிரதி பணிப்பாளர் பதவிக்காக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் இன்றி பணிப்பாளர் சபை தீர்மானம் ஒன்றின் பிரகாரம் தற்காலிக அடிப்படையில் கடமை மேவுகை செய்வதற்காக உத்தியோகத்தர் ஒருவர் 2021 ஜுலை 28 ஆம் திகதி நியமிக்கப்பட்டு தாபன விதிக் கோவையின் II அத்தியாயத்தின் 13.7 ஆம் பிரிவிற்கு முரணாக கடமை மேவுகைக்கான நியமனத்திற்குரிய படிகளாக ரூபா 1.19 மில்லியனும் சம்பளமாக ரூபா 2.98 மில்லியனும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலதிக கடமைப் படிகளாக ரூபா 2.69 மில்லியன் கொடுப்பனவு செய்தற்குரிய கையளிக்கப்பட்ட மேலதிக கடமைகள் தொடர்பான கடமை பட்டியல் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை இதுவரை 1 ½ ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் சேவையில் ஈடுபடுத்தப் பட்டிருந்ததுடன் நிரந்தர அடிப்படையில் வெற்றிடத்தை நிரப்புவதற்கு கணக்காய்வு திகதியான 2023 மார்ச் 24 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை | சுகாதார அமைச்சின் கடிதத்தில் பிரதிப் பணிப்பாளர் பதவியை ‘கடமை மேவுகை’’ (Covering Up) என்று குறிப்பிட்டுள்ள போதிலும், இந்த உத்தியோகத்தரை ஈடுபடுத்தி அப் பிரதிப் பணிப்பாளர் பதவிக்கு முழு நேர (Full Time) அடிப்படையில் பணி யமர்த்தப்பட்டுள்ளதாக பதில் கடமை படிகள் நிறுத்தப்பட்டு அதனை கொடுப்பனவு செய்த திகதியிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் பிரதிப் பணிப்பாளர் பதவியில் நிரந்தர ஊழியராக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்ட பணத்தை அறவிடுவதற்கும் நிரந்தர அடிப்படையில் வெற்றிடத்தை நிரப்புவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைத்து 02 வகை பதவிகளுக்காக 231 உத்தியோகத்தர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியில் இல்லாத 05 பதவிகளுக்காக 09 உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்தனர். | எனினும் அனைத்து பதவிகளுக்கும் ஆட்சேர்ப்பு மற்றும் (தற்காலிக/ஒப்பந்த) பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்படுகின்றது. மருத்துவமனையை திறம்பட நடத்தும் நோக்கில், பணிப்பாளர் சபை அங்கீரத்துடன் மருத்துவமனையில் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. அந்த எண்ணிக்கை 196 மாத்திரமே. | ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரித்து அங்கீகரித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.4 வாகன முறைமை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலைக்கு சொந்தமாக 16 வாகனங்கள் காணப்பட்டதுடன் அவ்வாகனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. | | |
| (i) தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை 150 இன் பிரகாரம் சுகாதார அமைச்சரின் வேண்டுகோளின் பிரகாரம் தேசிய பாதீட்டு திணைக்களச்சிடமிருந்து 06 வாகனங்கள் வைத்தியசாலைக்கு கிடைத்து 05 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்த போதும் இந்த அறிக்கை திகதி வரை வைத்தியசாலைக்கு கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டு எடுக்கவில்லை. | இது தொடர்பான தகவல்கள் சுகாதார அமைச்சு மற்றும் இலங்கை வங்கியிடம் கோரப்பட்டுள்ளதுடன், அத்தகவல்களில் தாமதம் ஏற்பட்டதால், இந்த கையேற்றல் தாமதமானதாகவும். எதிர்காலத்தில், அந்த வாகனங்களை கையேற்று, நிலையான சொத்துகள் பதிவேட்டில் உள்ளடக்க நடவடிக்கை எடுப்பதாக. | வாகனத்தை கையேற்பதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 2018 ஆம் ஆண்டின் போது நிதியமைச்சிடமிருந்து இந்த வைத்தியசாலைக்கு கிடைத்திருந்த வாகனம் ஒன்று 2019 நவம்பர் 22 ஆம் திகதி இடம்பெற்ற திடீர் விபத்து ஒன்று தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பரிசோதனை நடத்தி பொறுப்பான தரப்பினர் திட்ட வட்டமாக இனங் காணப்பட்டிருக்கவில்லை. 2022 ஒக்டோபர் 20 ஆம் திகதி தனியார் கம்பனி ஒன்று சமர்ப்பித்த ரூபா 489,200 ஆன மதிப்பீட்டின் பிரகாரம் திருத்த வேலைகளுக்காக அனுப்பப்பட்டிருந்த போதும் விபத்து நடைபெற்று 03 ஆண்டுகள் கழிந்த காரணத்தினால் காப்புறுதி மூலம் மேவுகை செய்வதற்கான இயலுமை உள்ளதா என்பது சர்ச்சைக்குரியதாக இருந்தது. | திடீர் விபத்து தொடர்பாக நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | வைத்தியசாலைக்கு சொந்தமான 03 வாகனங்கள் திருத்த வேலைகளை உரிய திகதியில் மேற்கொள்ள முடியாமையால் 2023 மார்ச் 10 ஆம் திகதி வரையில் ஓட்டத்தில் ஈடுபடுத்தும் நிலைமையில் காணப்படவில்லை. | இந்த வாகனங்களுக்கான உதிரி பாகங்களை தேடுவதில் உள்ள சிரமம் மற்றும் அதன் விலைகளை வழங்க கால அவகாசம் எடுத்துள்ளதாகவும், உதிரி பாகங்கள் கிடைத்தவுடன் உடனடியாக திருத்த வேலைகளை செய்து தருவதாகவும் அந்நிறுவனத்தின் தலைவர்களால் அறிவித்துள்ளதாக | வாகன திருத்த வேலைகளைள் விரைவில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |